Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.67/2021**

**Deposition of PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பாலமுருகன் | ஜாதி | : |
| த/பெ | :பழனிச்சாமி | தொழில் | :கூலி வேலை |
| கிராமம் | :ராமநாதபுரம் | சமயம் | : |
| தாலுகா | :ஆத்துார் | வயது | :32/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2023.

(Accused A1 present. Accused A2 absent. Petition filed U/s.317 Cr.P.C. allowed)

முதல் விசாரணை

நான் ராமநாதபுரத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.07.2021 அன்று இரவு 07.00மணியளவில் கே.ராமநாதபுரத்தில் பாத்ரூம்காக நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது சின்னமௌனம் தோட்டம் அருகே கூட்டமாக இருந்தார்கள். அப்போது அழகர் சாமி என்பவர் அங்குநின்றிருந்தார். அங்கு ஒருவர் வெட்டுபட்டு கிடந்தார் அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி விட்டு அங்கிருந்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது முதல்விாசரணையில் சொன்ன சங்திகளை தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது. அழகர்க்கு போலிசுக்கும் நல்லபழக்க வழக்கம் இருந்ததால் அழகர் என்னை அங்கு அழைத்து சென்றார். நான் சம்பவம் இடம் செல்வதற்கு முன்பே அங்கு நிறைய பேர் இருந்தார்கள். அழகரும் நானும் கையொப்பம் செய்தோம். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

District Munsif Cum Judicial Magistrate,
Athoor